Registered as a Newspaper in Sri Lanka. No. A 13.

# ஐக்கியதீபம்

தேசீய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக்குழு) வெளியீடு

மலர் : 29
இதழ் : 6

யாழ்ப்பாணம்
1974
மாசி

## இந்த இதழில்....

ஆசிரியர் தலையங்கம்

கூட்டுறவுச் செய்திகள்

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் :
தோற்றுவாயும் வளர்ச்சியும்

உணவுற்பத்தி

உள்ளன்பு மிக்க நண்பன்

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்

Agricultural Co-operatives

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

மலர் 29 | யாழ்ப்பாணம், மாசி 1974 | இதழ் 6


## மேலும் நெருக்கடி

1973ம் ஆண்டில் இந்நாடு முன்பு எப்போதும் இல்லாத அளவில் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

பெரும்போக விளைச்சல் ஓரளவிற்கு வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை இருப்பதனால் இனிமேல் நமக்குக் கஷ்டமில்லை. நாம் முன்புபோல் சொகுசாக வாழலாம் என்று பலர் நினைக்கலாம். இத்தகைய மனப்பான்மை மிகவும் ஆபத்தானது என்பதை நாம் மிகவும் அழுத்திக் கூறவிரும்புகின்றோம்.

பல நாடுகளிலே நிலவும் போக்குகளை அவதானிக்கும் பொழுது இவ்வாண்டு சென்ற ஆண்டையும் விட அதிக இன்னல்களை விளைவிக்கக் கூடியதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

எண்ணெய் ஏற்றுமதி குறித்து அரபு நாடுகளின் கெடுபிடி அபிவிருத்தியடைந்துள்ள மேற்கத்திய நாடுகளிலே திகிலை உண்டாக்கியிருக்கிறது. இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளிலே இக்கெடுபிடியால் இடைஞ்சல் எதுவும் ஏற்படாதென சிலர் கருதலாம். ஆனால், உண்மையிலே எம்போன்ற நாடுகள்தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும் என்று வல்லுனர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எண்ணெய்த் தட்டுப்பாட்டால் எமது கைத்தொழில் மட்டுமல்ல, எமது விவசாயமுமே பாரதூரமாகப் பாதிக்கப்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. புகய நெல்லினங்களின் அதிக விளைச்சலுக்கு வேண்டிய செயற்கை உரம் இவ்வாண்டு கிடைப்

ப்து கடினம் என இப்பொழுதே அரசாங்க வட்டாரங்கள் எச்சரிக்கத் தொடங்கியுள்ளன. இவ்வாறன அபாயநிலை உருவாகின் உணவுற்பத்தி இயக்கம் வெகுவாகப் பாதிக்கப்படும் என்பது சொல்லாமலே விளங்கும்.

வேறு வழிகளிலும் எண்ணெய் நெருக்கடி எமது விவசாயத்தைப் பாதிக்கும். உழவு இயந்திரங்களின் வாடகை அதிகரிப்பதினால் நெல்லுற்பத்திச் செலவினங்கள் உயர்ந்து கொண்டே போகும் என்பதில் ஐயமில்லை. இதேபோன்று நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு வேண்டிய எண்ணெய் விலை அதிகரித்திருப்பதினால் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கான செலவினங்களும் அதிகரிக்கும். இவற்றின் விளைவாக சிறு கமக்காரரும், பாவனையாளர்களும் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டி நேரிடும். எனவே, சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் பெரும்பாலான மக்கள் கஷ்டத்திற்குள்ளாவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

இந்நிலையிலிருந்து எமக்கு மீட்சியே இல்லையா? நாம் எமது பழைய பாரம்பரியத்தை நினைவு கூருவோமேயானால் எல்லாவற்றிற்கும் மேற்கத்திய நாடுகளையே முன்மாதிரியாகக் கொள்ளும் மனப்பான்மையை கைவிடுவோமேயானால் நிலைமையை நாம் ஓரளவிற்குச் சமாளிக்கலாம். முன்பு எமது மூதாதையர் செயற்கை உரத்தை நாடாது கூட்டுப் பசளையையே பெரிதும் பயன்படுத்தினர். பெரிய கிடங்குகளைத் தோண்டி மாட்டெரு, குப்பை கூழங்களைச் சேகரித்து வைத்து பின்பு இவ்வியற்கைப் பசளையைத் தமது வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் உபயோகித்தனர். இன்றும் செயற்கை உரத்துடன் சீனுவிலே இத்தகைய இயற்கைப் பசளையை வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றனர். இன்றுதோன்றியுள்ள சூழ்நிலையில் எமது மூதாதையரின் பழக்கத்தை நாம் கடைப்பிடிப்பது ஓரளவு வெற்றி தரும்.

உழவு இயந்திரங்களை இங்கு இறக்குமதி செய்ய முன்பு எருமைகளையும், மாடுகளையும் உழவுக்குக் கமக்காரர் பயன்படுத்தினர். இன்றைய சூழ்நிலையில் மீண்டும் இந்தப் பழக்கத்தைக் கையாளுவதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம்.

இவ்வாறு நாம் எமது பழைய பாரம்பரியங்களை மீண்டும் கையாள்வதன் மூலம் அந்நிய செலாவணியை மிச்சம் பிடிப்பதுடன் கூடுதலான வேலை வாய்ப்புக்களையும் எமது மக்களுக்கு அளிக்கலாம். எடுத்துக்காட்டாக களை நாசினிகளைப் பயன்படுத்துவதைக் குறைத்து களை பிடுங்குவதற்கு ஆட்களை அமர்த்தலாம்.

இன்றைய காலகட்டத்தில் கூட்டுறவு இயக்கத்திற்குப் பாரிய பொறுப்புண்டு. நாம் முகங்கொடுக்கும் நெருக்கடியின் தன்மையையும், அதனைச் சமாளிப்பதற்கான மேற்கூறிய வழிகளையும் உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் எடுத்துரைத்து எமது நாட்டை உய்விப்பதற்கு தூண்டுகோலாக அமைதல் வேண்டும். மக்களிடையே சூழ்நிலைக்கேற்ற மனமாற்றத்தை ஏற்படுத்த முயல வேண்டும்.

# கூட்டுறவுச் செய்திகள்

## கடற்றொழிலாளருக்கு உதவும் திட்டம்

கடற்றொழிலாளர்களுக்கு 1974 ம் ஆண்டில் 50 வீடுகள் கட்டுவதற்கும், வேண்டிய வலைகள், வள்ளங்கள் கொடுப்பதற்கும் அரசாங்க அதிபர் திட்டம் வகுத்துள்ளார் என்று ஊர்காவற்றுறை கூட்டுறவு மீன்பிடிச் சங்கத்தின் ஊரியான் கிளை நடாத்திய பயிற்சி வகுப்பிற்கு மாவட்ட மீன்பிடி அதிபர் செல்வி சத்தியபாமா தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

காரியாலயப் பரிசோதகர் திரு. பொ. கோவிந்தசாமி பேசுகையில் கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்காலம் உங்கள் கையில் தான் இருக்கிறது. இதை முன்னேற்றம் அடையச் செய்ய 18 வயதிற்கு மேற்பட்ட யாவரும் அங்கத்தவராகச் சேரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி கல்வி உதவியாளர் திரு. ஆ. மகேஸ்வரா கூட்டுறவின் மூலமே மக்கள் தமது வாழ்க்கையை வளம்படுத்தலாம் என்று கூறினர்.

சிநோர் தாபன அதிகாரி பேசுகையில் வலைகளை தாம் விநியோகம் செய்யவும், ஒரு வள்ளத்தினை அரைவாசி விலைக்கு விற்கவும் இருப்பதாகக் கூறினர். கருவாடு போடுவதற்குரிய சூழ்நிலை இங்கு இருப்பதால் கருவாடு போட ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் காரியதரிசி திரு. பிலிப் பேசுகையில் உறுப்பினர்கள் சேமிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினர். ஊரியான் சங்கப் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறி அவற்றிற்கு உதவும்படி மாவட்ட மீன்பிடி அதிபரைக் கேட்டுக் கொண்டனர்.

# விரிவான ஓர் இயக்கம்

கூட்டுறவு இயக்கம் வாழ்க்கையின் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய மிக விரிவான ஓர் இயக்கம் என ஊக்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. நாகராசா நெறியாளர் குழுவிற்கு நடாத்தப் பட்ட கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: கூட்டுறவு இயக்கத்தில் குறைபாடுகள் இருந்த போதிலும் அவற்றை நாம் களைய முனையவேண்டும். நாம் எல்லோரும் ஒரு குடும்பம் போல இயங்கினால் தான் கூட்டுறவுச் சங்கம் வெற்றிகரமாக இயங்க முடியும். காரியாலயப் பரிசோதகர் திரு. K. சந்திரசேகரம் இக்கருத்தரங்கு ஐயங்களைப் போக்க உதவும் என்று கூறினார். காரியாலயப் பரிசோதகர் திரு. V. E. சண்முகம் இத்தகைய கருத்தரங்குகளில் கருத்துப் பரிமாறுவதன் மூலம் தெளிவு பிறக்கும் என்று கூறினார்.

நெறியாளர் குழுவிலே நியமனம் பெற்றவர்களுக்கும், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் எந்தவித ஏற்றத்தாழ்வும் இல்லை. நெறியாளர் என்ற வகையிலே எல்லோரும் சரிசமம் என திரு. சி. நாகலிங்கம் கூட்டுறவு உதவி ஆக்க உதவியாளர் யாழ்ப்பாணம் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழு கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். இவ்வாண்டிலே கமக்காரருக்கும், விவசாயிகளுக்கும் ப. நோ. கூ. சங்கம் முதலிடம் கொடுக்க வேண்டும் என அவர் வேண்டிக் கொண்டார். இக் கூட்டத்திற்கு திரு. ப. கதிரவேலு தலைமை வகித்தார். காரியாலயப் பரிசோதகர் திரு. V. E. சண்முகம் கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தார்.

# விற்பனை நிலையம்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம் அண்மையில் வத்தராயன் வடக்கில் கடற்றொழிலாளரின் நலன் கருதி ஒரு விற்பனை நிலையத்தினைத் திறந்து வைத்தது.

# மறைந்த கூட்டுறவாளருக்கு அஞ்சலி

இலங்கைக் கூட்டுறவு இயக்கம், குறிப்பாக வட பகுதிக் கூட்டுறவு இயக்கம் திரு. J. F. சிக்மறிங்கத்தின் அகால மரணத்தினால் ஈடிணையற்ற நட்டமடைந்துள்ளது.

அன்னார் பரி. யோவான் கல்லூரியில் மிகச் சிறந்த முறையில் விஞ்ஞான ஆசிரியராகத் தொண்டாற்றியதுடன், கூட்டுறவு இயக்கத்திலும் முன்னணி வகித்தார். யாழ் மாவட்டத் துறைமுகச் சேவைகள் சமாசத்திற்கு அவர் பல ஆண்டுகளாகத் தலைவராகப் பணிபுரிந்து அச் சேவைகளில் ஈடுபட்டுழைத்தவர்களுக்குப் பல வழிகளிலும் அரிய வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அன்பும், பண்பும் நிறைந்த திரு. சிக்மறிங்கத்தின் மறைவு குறித்து நாம் கூட்டுறவு இயக்கத்தின் சார்பாக அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிக்கின்றோம்.

# பொங்கலில் அறுவடை

கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றிலேயே முதல் தடவையாக பொங்கலையொட்டி கராச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கப் பிரிவிலே அறுவடை விழாவை ஜனவரி மாதம் 25 ந் திகதி அரசியல் அதிகாரி திரு. சி. அருளம்பலமும் (பா.உ.) யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவும் சம்பிரதாய பூர்வமாகத் தொடங்கி வைத்தனர். இவ்வறுவடை விழா மூன்றும் வாய்க்காலிலுள்ள பரியாரி பொன்னையாவின் வயலில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V.S. இராமநாதனும், கூட்டுறவு உத்தியோகத்தர்களும், மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. கலாபரமேஸ்வரனும் சமுகமளித்தனர்.

அடுத்த அறுவடை விழா பூநகரியில் இம்மாதம் 8 ந் திகதி அரசியல் அதிகாரிகளினதும், அரசாங்க அதிகாரிகளினதும் தலைமையில் கொண்டாடப்பட்டது.

# கூட்டுறவு மூலமே பொருளாதார அபிவிருத்தி

பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு இயக்கம் மூலமே சாத்தியமானது என பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. நடராசா நெறியாளர் குழுவிற்கான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: அருந்தலான பொருள்களை விநியோகிப்பதே கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமல்ல. மக்களின் வாழ்க்கையோடு கூட்டுறவு இயக்கம் இணைந்திருக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது: நாம் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு எமது குறைபாடுகளைக் களைய முனையவேண்டும். மக்களின் வாழ்வை உய்விப்பதற்கு கூட்டுறவு இயக்கமே சிறந்த கருவி, கூட்டுறவுப் பணியாளர் மக்களுக்குச் சேவை செய்வதையே தமது இலட்சியமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

காரியாலயப் பரிசோதகர் திரு. V. E. சண்முகம் சங்கங்கள் திறம்படச் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

# படித்த வாலிபர் குடியேற்றம்

நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பளைப்பகுதியிலுள்ள தாமரைக் கேணித் தோட்டத்தில் 50 படித்த வாலிபர் குடியேற்றப்பட உள்ளனர். கூட்டுறவு அடிப்படையிலே இயங்கும் திட்டத்தில் 5 ஏக்கர் காணி வழங்கப்படும். இவ்விளைஞர் தலா ரூ. 1000/- பங்கை ஆண்டுதோறும் ரூ. 100/- தடவைப்பணமாக முற்றுகச் செலுத்தி முடித்ததும் காணி இவர்களுக்குச் சொந்தமாகும். 10 ஏக்கர் காணி பொது வசதிகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தென்னையையும், உப உணவுப் பயிர்களையும் இவர் பயிரிடுவர். இவ்விளைஞர்களின் வசதிக்காக பளை ப. நோ. கூ. சங்கம் கூட்டுறவு விற்பனை நிலையம் ஒன்றினை இப்பகுதியிலே திறக்க இருக்கின்றது.

# முகாமையாளருக்குப் பிரியாவிடை

யாழ்ப்பாண கூட்டுறவு நெசவுச் சங்கங்களின் சமாசத்தில் முகாமையாளராகப் பணிபுரிந்த திரு. வல்லிபுரம் முருகேசு மார்கழி மாதம் ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு மேற்படி சமாசம் சமீபத்தில் சிறப்பான ஒரு பிரியாவிடை வைபவத்தினை ஒழுங்கு செய்து பாராட்டியுள்ளது.

1954ம் ஆண்டு ஓர் உதவியாளருடன் இச்சமாசத்தில் பணிபுரியத் தொடங்கிய இவர் பின்பு அந் நிறுவனத்தின் முகாமையாளராகி அதன் செழுமைக்கும், கூட்டுறவு மேம்பாட்டிற்கும் தனது அரும் பணி மூலம் கணிசமான பங்கினை வழங்கியுள்ளார். பல கிளைத்தாபனங்களைக் கொண்டதாக வளர்ந்து நாலாயிரம் நெசவுத்தறிகளுக்குத் தேவையான நெசவு நூலினை விநியோகம் செய்து வருவதுடன் கூட்டுறவுச் சங்கங்கள் லக்சலா, சலுசலா முதலிய நிறுவனங்களுக்கும் துணி வகைகளை வழங்கிவரும் மேற்படி சமாசத்திலிருந்து அவர் இளைப்பாறும் காலத்தில் நூறு ஊழியர்களுக்கு அதிகமானோருக்கு அவர் முகாமையாளராக விளங்கினார்.

# உர உற்பத்திச்சாலை

உர உற்பத்தித் தொழிற்சாலையையும், வைக்கோல் அட்டை உற்பத்திச் சாலையையும், வெகுவிரைவில் கராச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் தொடங்கவிருக்கின்றது. இதற்கான அங்கீகாரத்தை கூட்டுறவு ஆக்க ஆணையாளர் வழங்கியுள்ளார். மேலும், உழவு இயந்திர உதிரிப்பாக உற்பத்திச் சாலையையும் தொடங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது

# சிறுவர் உடைத் தொழிற்சாலை

சிறுவர் உடைத் தொழிற்சாலை யொன்றினை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைத்தார்.

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்:

## தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

### சந்தைப்படுத்தல், உற்பத்தி வேறு விசேடவகைச் சங்கங்கள்

இலங்கையின் புவியியல் அமைப்பு காரணமாக போர்க்கால நடவடிக்கைகளுக்குள் இலங்கை ஈர்க்கப்படுவது தவிர்க்க இயலாததாயிற்று. பொருளாதார வளர்ச்சியையும், பூரண வேலை வாய்ப்பையும் இலங்கை அனுபவித்தது. அரசாங்கம் வகுத்திருந்த கொள்வனவுத் திட்டங்களும், கூடுதலான விலைகளும், உற்பத்தியாளருக்கு ஏற்றமளித்தன. உள்ளூர் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் இயன்றளவு கூட்டுறவு நிறுவனங்களே அரசாங்கத்தின் சார்பாக சேகரிக்கும் முகவர்களாக நியமிக்கப்பட வேண்டுமென விவசாய, காணி அமைச்சர் உத்தரவிட்டார். இத்தகைய சூழ்நிலையில் பண்டசாலைச் சங்கங்களை தவிர்ந்த ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சியுறுவதற்கு வழிவகுக்கப்பட்டது.

1942 ல் 71 சந்தைப்படுத்தல் உற்பத்திச் சங்கங்கள் இருந்தன. 1945ல் இத்தொகை 160 ஆக அதிகரித்தன. இவற்றில் 27 ஐத் தவிர ஏனைய சங்கங்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

மிகப் பழைய சந்தைப்படுத்துதல் சங்கம் யாழ்ப்பாண மலையாள புகையிலை விற்பனவுக் கூட்டுறவுச் சங்கமாகும். இதுவே மிகவும் வலிமை மிக்கதாகக் காணப்பட்டது. ஆண்டுதோறும் அதன் விற்பனை 15 லட்சம் ரூபாவிற்கு அதிகமாகவிருந்தது. 40 வீதத்திற்குக் கூடுதலாக ஆதரவிற்கேற்ற லாப பாகத்தை உறுப்பினர்களுக்கு அது வழங்கியது. அடக்கப் பணமாக

ரூ. 107,156 இருந்தது. உறுப்பினர் தொகை ஏறக்குறைய ரூ. 2000/-

வேறு இரு புகையிலை விற்பனைச் சங்கங்களைத் தவிர 20 விளைபொருள் விற்பனவுச் சங்கங்களும் இயங்கிவந்தன. இவற்றில் ஏழு வடமாகாணத்திலும், ஏழு மத்திய மாகாணத்திலும் நிறுவப்பட்டிருந்தன. வடபகுதியிலுள்ள சங்கங்கள் மிகத் திறமாக இயங்கிவந்தன. குடாநாட்டில் நிறுவப்பட்டிருந்த 5 சங்கங்கள் - பிரதானமாக வெங்காயம், மிளகாய் உற்பத்தியிலும் விற்பனவிலும் அக்கறை செலுத்தி வந்தன. மொத்தமாக 10 சங்கங்கள் பிரதானமாக நெல்லுற்பத்தியிலும் விற்பனையிலும் அக்கறை செலுத்திவந்தன. இவற்றில் 2 வவுனியாவிலும், 2 அம்பாந்தோட்டையிலும், 6 வடமத்திய மாகாணத்திலும் இயங்கி வந்தன. இவற்றில் எல்லாம் மிகக் குறிப்பிடத்தக்கதும், மிகப் பழமை வாய்ந்ததும் மின்னேரியாச் சங்கமே.

இவ்வகைச் சங்கத்தில் குறிப்பிடத்தக்க இன்னொரு சங்கம் வெலிமடைக்கு அண்மையிலுள்ள பளுகாமத்தில் நிறுவப்பட்டிருந்த உடபளாத்த விளை பொருள் விற்பனவுச் சங்கம். காய்கறி உற்பத்தியாளர் இதில் உறுப்புரிமை வகித்தனர். ஆண்டுதோறும் அதன் விற்பனவு ரூ. 125,728/-.

1942 ல் 11 தெங்குப் பொருள் சங்கங்கள் இருந்தன. 1945 ல் இத்தொகை முப்பதாக உயர்ந்தது. இவற்றில் 19 வடமேற்கு மாகாணத்திலும், 11 மேற்கு மாகாணத்திலும் 1 மட்டக்களப்பிலும் இருந்தன. இரண்டு சங்கங்களைத் தவிர ஏனைய சங்கங்கள் இலங்கைத் தெங்குப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனவுச் சமாசத்தில் உறுப்புரிமை பெற்றிருந்தன. சங்கங்களில் மொத்த உறுப்பினர் தொகை 1408. உறுப்பினர்க்குச் சொந்தமான மொத்தக் காணி 25 ஆயிரம் ஏக்கர். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெற்ற மொத்த விற்பனையின் பெறுமதி ரூ. 25 லட்சத்திற்கு மேற்பட்டது.

இக்கால எல்லையில் 8 கூட்டுறவுப் பாற்பண்ணைச் சங்கங்களின் தொகை அதிகரிக்கவில்லை. கொழும்பு பாற்பண்ணைச் சங்கங்கள் தமது பாலை பால் சமாச மூலம் விற்பனை செய்யத் தொடங்கின.

21 புடைவை நெசவுச் சங்கங்களும், 2 பாய் இழைத்தல் சங்கங்களும், இரண்டு கயிறு திரிக்கும் சங்கங்களும், கருத்துறையில் கூடைபின்னும் சங்கமொன்றும் இக்கால எல்லையில் இயங்கிவந்தன. வடக்கிலிருந்த சங்கங்கள் யாழ்ப்பாணக் கூட்டுறவு நெசவு, கைத்தொழில் சங்கங்களின் சமாசத்தில் உறுப்புரிமை பெற்றிருந்தன.

ஐந்து கூட்டு விவசாயப் பண்ணைச் சங்கங்கள் நிறுவப்பட்டிருந்தபோதிலும் அவை அவ்வளவு நம்பிக்கை தருவனவாக இருக்கவில்லை. எனினும், ஹத்தரலியாதே, பூரோகோயா ஆகிய இடங்களில் நிறுவப்பட்டிருந்த றப்பர் பதனிடுதல் விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் மிகத் திறமான றப்பரை உற்பத்தி செய்து வந்தமை குறிக்கற்பாலது.

1942 ல் ஒரேயொரு கடற்றொழிலாளர் சங்கமே இருந்தது. இக்கால எல்லையில் சங்கத்தொகை 30 ஆக உயர்ந்தது. மொத்த உறுப்பினர் தொகை 1400. இவற்றில் 4 சங்கங்களின் நிலை மோசமாக இருந்தது. இச்சங்கங்களின் மொத்த விற்பனவு ரூ. 731,500. இத்தொகையில் வடக்கிலுள்ள 10 சங்கங்கள் ரூ. 257,550 பெற்றன. நீர்கொழும்பிலிருந்த தூவ கருவாட்டு விற்பனவுச் சங்கம் 4 இலட்சத்தை பெற்றது. மீன்பிடி ஆணையாளர் இச் சங்கங்களுக்குக் கடனுதவி வழங்கியதோடு உற்பத்திப் பொருள்களையும் கொள்வனவு செய்தார்.

ஏனைய உற்பத்தி விற்பனவுச் சங்கங்களில் உவல்லகொட கூட்டுறவு சிற்றனெல்லா எண்ணெய் வடிசாலைச் சங்கம் (அம்பாந்தோட்டை மாவட்டம்) மகவுபொத்த தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் (பண்டாரவளை) குரம்பிட்டிய ஏலக்காய் பதனிடும் சங்கம் (கொத்மலை) கண்டி கித்துல் பனங்கட்டி விற்பனவுச் சங்கம் ஆகியன இடம் பெறும்.

கூட்டுறவு அடிப்படையிலே தேயிலைத் தொழிற்சாலை ஒன்றினை நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவை வெற்றியளிக்கவில்லை. குறிப்பிடத்தக்க வேறு விசேடவகைச் சங்கங்களும் இயங்கிவந்தன. தனிச் சிறப்பு வாய்ந்த தொல்புரம் மூளாய் கூட்டுறவு மருத்துவமனை தொ

டர்ந்து செழிப்பாக வளர்ச்சியுற்று வந்தது. தாயமாக 33 ஆயிரம் ரூபாவை அது ஈட்டியது. வடபகுதியிலே நிறுவப்பட்டிருந்த 4 போக்குவரத்துச் சங்கங்களும் பெருமை கொள்ளத்தக்கனவாய் விளங்கின. அவையாவன: வடமராட்சி மோட்டார் போக்குவரத்துச் சங்கம், முல்லைத்தீவு மோட்டார் போக்குவரத்துச் சங்கம், பண்ணை கூட்டுறவுப் படகுச் சேவைச் சங்கம், தீவுப் பகுதி இயந்திரப் படகு சேவைச் சங்கம். கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சங்கமே கூட்டுறவுப் போக்குவரத்துச் சேவைகளுக்கு முன்னோடியாக விளங்கியது.

போர்க்காலத்திலே பூரண வேலை வாய்ப்பு நிலவியதாலும், வருமானங்கள் உயர்ந்து கொண்டிருந்தமையாலும் 7 வகுப்புத் தொழிலாளர் சங்கங்களும் இயங்காதிருந்தன. இக்காலஎல்லையில் 10 மேம்பட்ட வாழ்வுச் சங்கங்களும் மூன்று திருந்திய கமத் தொழிற் சங்கங்களும் பதியப்பட்டிருந்தன.

(வளரும்)

# புதிய சங்கம் உதயம்

நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், வேறு விவசாயக் கருவிகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கும் கமவழிகாட்டல், விரிவாக்கல் சேவைகளை ஆற்றுவதற்கும் ஒரு சங்கத்தை உருவாக்கிப் பதிவு செய்வதென அண்மையில் யாழ்ப்பாண கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பிரிவிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் தீர்மானித்துள்ளன. தேசீய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழு கூட்டிய ஒரு மகாநாட்டிலே இம்முடிவு எடுக்கப்பட்டது. உத்தேச சங்கத்தின் பெயர் ''யாழ்ப்பாண விவசாய உற்பத்திச் சேவைகள் கூட்டுறவுச் சங்கம்'' (மட்டுப்படுத்தப்பட்டது)

இச்சங்கத்தின் உபவிதிகளை உருவாக்குவதற்கும், இதனைப் பதிவு செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஓர் உப குழு நியமிக்கப்பட்டது.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் 'கமநலம்' என்னும் சஞ்சிகையை ஆண்டொன்றுக்கு நான்கு இதழ்களாகப் பிரசுரித்து வருகின்றது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அதன் அங்கத்தவர்களுக்கும் இச் சஞ்சிகை பெரிதும் பயன்தரக் கூடியதாக இருப்பதினால் இதன் நான்கு இதழ்களையும், வருட சந்தா ரூபா 3/-வீதம் செலுத்திப் பெற்று பயனடையும்படி நாம் தகவுரை பகர்கின்றோம். கூட்டுறவுச் சங்கங்களோ, தங்கள் அங்கத்தவர்களுக்குத் தேவையான சஞ்சிகைகளைப் பெற்று வழங்குவது சிறந்தது. இதற்கான முழுப் பணத்தையும் சங்கங்கள், சஞ்சிகைகளைப் பெறவிருப்புடைய அங்கத்தவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கூடுதலான சஞ்சிகைகளைப் பெறுபவர்களுக்கு 10% கழிவு கொடுக்கப்படுகின்றது. சஞ்சிகைகளைப் பெற விருப்புடையோர், கீழ்தரப்பட்டிருக்கும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து சந்தாப் பணத்துடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## 'கமநல' சஞ்சிகையின் சந்தாக்காரராகச் சேருவதற்கான விண்ணப்பப் படிவம்

பணிப்பாளர்,
கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்,
த. பெ. இல. 1522,
33, எலிபாங்க் வீதி,
கொழும்பு—5

1974 ம் ஆண்டுக்கான 'கமநல' சஞ்சிகையில் சந்தாக்காரராகச் சேருவதற்காக இத்துடன்..................ரூபாவுக்கான காசோலை/காசுக்கட்டளை/தபாற்கட்டளை, சந்தாப் பணமாக அனுப்பி வைக்கின்றேன். தயவு செய்து எனக்கு/எமக்கு..........................சஞ்சிகைகளை அனுப்பி வைக்கவும்.

பெயர் :..............................................................................

முகவரி :............................................................................

..........................................................................

..........................................................................
கையொப்பம்

# நெற் கொள்வனவு விலையை உயர்த்துக !

## — விவசாயிகள் கோரிக்கை

''நெற் கொள்வனவு விலையைக் குறைந்தது ரூ. 40 – ஆக அதிகரிக்குக'' இவ்வாறு கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் நடைபெற்ற விவசாயிகளினால் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இம்மகாநாட்டிற்கு யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. A. A. யோசேப் தலைமைதாங்கினார்.

இம்மகாநாட்டில் விசேட உரையாற்றிய அரசியல் அதிகாரி திரு. சி. அருளம்பலம் (பா. உ.) பேசுகையில் கூறியதாவது: தமிழ் மக்களுக்குத் தனித்துவமான பராம்பரியங்களும் பண்புகளும் உண்டு. இவற்றில் ஒன்று நன்றி மறவாமை. எனவே, எமது கமக்காரர் தமது சங்கங்களிலேயிருந்து பெற்ற கடன்களைக் கண்ணியமாகத் திருப்பிக்கொடுப்பதற்குக் கடமைப்பட்டவர்கள். இறைவன் அருளால் இப்போகத்திலே எமது விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. ஆகவே, கடவுள் பயபக்தியுடன் எமது மக்கள் தமது பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

இம்மகாநாட்டில் நெல் கொள்வனவு பற்றியும், கடன்களைத் திருப்பிக் கொடுப்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. யோசேப் பேசுகையில் கூறியதாவது: உண்மையான கமக்காரர் அறுவடை செய்தபின்பு தமது நெல்லை வயல்களிலிருந்து தமது இல்லத்திற்குக் கொண்டு செல்வதற்கு ஆனையிறவு தடைமுகாமில் தேவையற்ற தலையீடுகளைத் தவிர்க்கும் பொருட்டு உயர்மட்ட அரசாங்க அதிகாரிகளை அத்தடைமுகாமில் மாற்றுவேலை நேரமுறையில் அமர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் உண்மையான கமக்காரர் தேவையற்ற கஷ்டங்களை அடையவேண்டியதில்லை.

நெல்லைச் சாக்குகளிலே கட்டி சங்கங்களுக்குக் கொடுப்பதற்குப் போதிய சாக்குகள் இல்லை என்பதனால் நாம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் கூட்டுறவுச் சங்கங்களிடமுள்ள சாக்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இதனால் தனிப்பட்ட வியாபாரிகள் அப்பாவி விவசாயிகளை இனிமேல் சுரண்ட முடியாது என பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. S. இராமநாதன் கூறினார்.

ஆரம்பப் ப. நோ. கூ. சங்கங்களின் கிளைகளினூடாக நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லைக் கொள்வனவு செய்து அரிசி ஆலைகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என திரு. K. சபாரத்தினம் யாழ்ப்பாணம் நெல் சந்தைப்படுத்தும் சபை பிரதேச முகாமையாளர் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: இன்று இயற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோர் ஆண்டுதோறும் தலா 12 புசல் நெல் தமது பாவனைக்காக வீட்டில் வைத்திருக்கலாம். இதை விட விதை நெல்லாக 1 ஏக்கருக்கு 3 புசல் நெல் வைத்திருக்கலாம்.

இவ்வாண்டிலே செயற்கை உரத்திற்கு உலகம் தோறும் பெரிய தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்பட்டிருப்பதனால் நாம் பழைய முறைப்படி எரு, குப்பை கூளங்கள் சேர்ந்த இயற்கைப் பசளைகளை மீண்டும் பயன் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை நினைவு கூரவேண்டும் என கிளிநொச்சி விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர் குறிப்பிட்டார். இதனால் பழைய நெல்லினங்களைச் சேகரித்து வைக்க வேண்டியதன் அவசியத்தினையும் அவர் வலியுறுத்தினார்.

இம்முறை நெற் கடன்களைத் திருப்பிக் கொடுக்காதவர்களுக்கு உரம் வழங்கப்படக்கூடாதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், நெற்சந்தைப் படுத்தும் சபைக்குக் கொடுக்கப்படும் நெல்லுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# உணவுற்பத்தி

இன்றைய நிலையில் உணவுற்பத்தியில் ப. நோ. கூ. சங்கங்கள் முயற்சிக்க வேண்டிய அவசியம் குறித்தும், அதற்கு தாம் அளிக்கவிருக்கும் ஆக்கபூர்வமான ஆதரவு குறித்தும் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுத்தலைவர் திரு. சு. கந்தையா ப. நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பியுள்ள இச் சுற்று நிருபத்தில் விளக்கியுள்ளார்.

மனிதனின் பூரண வளர்ச்சிக்கு அடிய திவாரமாக உள்ளது பொருளாதாரம். இதில் உணவு, உடை, வீடு இவை மூன்றுமே அத்தியாவசிய தேவைகளாகும். இவை இன்றேல் மனிதன் மனிதனாக சீவிக்கவோ வளரவோ முடியாது. ஆன்மீக துறையில் ஈடுபட்ட அருளாளர் சுவாமி விவேகானந்தரும் ஜேர்மனிய தேசத்து றவைசனும் ஆன்மீக வளர்ச்சிக்கும அத்திவாரமாக உள்ளது பொருளாதாரம் என உணர்ந்து சொல்லிலும் செயலிலும் நிலை நாட்டியுள்ளார்கள். இலங்கையில் தற்பொழுது நிலவும் உணவுப் பற்றுக் குறையை இட்டு தாங்கள் யாவரும் அறிந்த விஷயம். அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஆகவேண்டிய முயற்சிகளெல்லாம் துரிதமாகவும் முதற் கடமையாகவும் செய்து வருகின்றது. கௌரவ பிரதம மந்திரி அவர்களும் இந்த ஆண்டை உற்பத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தி இருக்கின்றார். நாட்டுக்கு வேண்டிய உணவுத் தேவையை சுய உதவியைக் கொண்டே பூர்த்தி செய்யலாம். அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் பொது மக்களின் உணர்ச்சியுடன் கூடிய ஒத்துழைப்பு இல்லாவிடின் எதிர்பார்த்த அளவு பலனை அளிக்காது. நாடும் உணவுத் தேவையில் தன்னிறைவு பெறாது

பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும்

தற்பொழுது நிலவும் உணவுக் கஷ்ட நிலையைப்பொது சனங்களின் மனதில் இருத்தி, உற்சாகமாக உணர்ச்சியோடு தேச அபிமானப்பற்றுடன் ஒத்துழைக்கச் செய்யக்கூடிய நிலையில் புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் நடுநாயகமாக விளங்குகின்றன. எனவே நாட்டில் உள்ள உணவுச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கவும் பொருளாதாரத்தை இருத்தி அமைக்கவும் ப. நோ. கூ. சங்கங்கள் தீவிரமாக நேரடியான முன்மாதிரியான நடபடிக்கைகளில் இறங்காவிட்டால் அவை தங்கள் கடமைகளை நாட்டிற்குச் செய்யத் தவறியமையாகக் கருதப்படல் வேண்டும். புனரமைக்கப்பட்டதன் பலனையும் முழுமையாகப் பெற முடியாது.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை யாழ்ப்பாணக் கிளை சென்ற கூட்டத்தில் இவ்விடயத்தில் உங்கள் கவனத்தை ஈர்க்குமாறு தீர்மானித்துள்ளது. உணவுற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உற்பத்தி வசதிகளை தாமதமின்றிசெய்து கொடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களும் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடவேண்டும். இவற்றினையொட்டி தங்களுக்கு பின்வரும் ஆலோசனைகளைப் பணிவுடன் கூறி வைக்க விரும்புகின்றோம்.

1. விவசாயிகளை உணவு உற்பத்தியில் ஊக்கப்படுத்தல்

தங்கள் தொழிற்பரப்பில் உள்ள கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக உற்பத்தியாளரைக் கொண்ட மகாநாடு அல்லது கருத்தரங்கு அல்லது பயிற்சிவகுப்பு நடாத்தி விவசாயிகளுக்கு நாட்டிலுள்ள உணவுப்பற்றுக்குறை நிலைமையையும், அதை நிவர்த்தி பண்ண உற்பத்தியாளர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் அவர்கள் மனத்தில் அழுத்த வேண்டும். அவர்கள் முழு மூச்சுடன் உற்பத்தியில் ஈடுபடத் தடங்கலாக உள்ள கஷ்டங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றைத் தீர்த்து வைக்க இயக்குநர்சபை துரிதமான நடபடிக்கைகள் எடுக்க வேண்டும். உணவுப் பயிர்களையே உற்பத்தி செய்யுமாறு அதன் அவசியத்தை விளக்க வேண்டும். புகையிலை போன்ற காசுப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுத்தப்படும் நிலங்களை

உணவுச் செய்கைக்கு திருப்பும்படியாக ஊக்கப்படுத்த வேண்டும்.

2; ப. நோ. கூ. சங்கங்கள் உற்பத்தியாளருக்குச் செய்து கொடுக்க வேண்டிய வசதிகள்

1. உற்பத்திக்குத் தேவையான கடன் வசதிகளை உடனுக்குடன் தேவையானபோது ஒழுங்கு செய்து கொடுத்தல்.

2. உரவகைகள், கிருமி நாசினிகள், தெளிகருவிகள் போன்றவற்றைக் களஞ்சியங்களில் வைத்து விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுத்தல்.

3 உணவு விதைகள், நாற்றுகள், கன்றுகள் பெற்றுக் கொடுத்தல்.

4. பெரும்பாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர் இறைக்கும் இயந்திரங்களே நீர்ப்பாசனத்திற்கு உபயோகிக்கப்படுகின்றபடியால் நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்க அதிபரின் உத்தரவுச்சீட்டுப்பெற சங்கங்கள் விவசாயிகளுக்கு உதவி அளிக்க வேண்டும். நீர் இறைக்கும் இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை சங்கங்கள் முன்னுடியே கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும். இப்பொழுது எல்லாச்சங்கங்களும் இவ்வழியில் செயற்படாததினுல் விவசாயிகள் நான்கு ஐந்து மடங்கு விலைகொடுத்தே தனியாரிடமிருந்து உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்கின்ருர்கள். இந்நிலை மாறவேண்டும். ப. நோ. கூ. சங்கங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களையும், தெளிகருவிகளையும் பழுது பார்க்கும் பொறுப்பை ஏற்று வேலைக்கூடங்களை அமைத்து தமது நிருவாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டும்.

5. மிதமிஞ்சி ஒரு குறிப்பிட்ட உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் விவசாயியிடம் இருந்து நியாயமான விலையைக் கொடுத்து அவனின் தேவைக்கு மிஞ்சிய பொருளைக் கொள்வனவு செய்து அப்பொருளில் தங்கள் தொழிற்பரப்பில் பற்ருக்குறை இருந்

தால் சமபங்கீடு செய்ய ஒழுங்குகள் செய்தல் வேண்டும். பற்றுக் குறை இல்லாவிடில் ஏற்ற விலையைப்பெற சந்தைப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

6. தங்கள் தொழிற்பரப்பில் தரிசாகச் செய்கையில் ஈடுபடாமல் காணிகள் இருந்தால் அவற்றை சொந்தக்காரரிடம் இருந்து குத்தகையாக சங்கம் பெற்று அக்காணிகளைச் செய்கை பண்ணக் கூடிய நிலம் இல்லாத விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுத்து குத்தகைப் பணத்தை அறவிட்டு நிலம் சொந்தக்காரருக்குக் கொடுக்கலாம். தரிசாகக் கிடக்கும் நிலங்களை நிலம் திருத்துதல், கிணறுவசதி போன்ற தடைகள் இருந்தால் அவற்றைத் தீர்த்து வைக்க கடன் வசதிகளை ஒழுங்கு செய்து கொடுக்கலாம். மூடிக்குரியகாணிகள் தங்கள் தொழிற்பரப்பில் இருப்பதாயின் அவற்றை அரசாங்கத்திடம் இருந்து சங்கமே நேரடியாகப் பொறுப்பேற்று சங்க நிருவாகத்தின் கீழ் நேரடியான செய்கையில் ஈடுபடுத்தலாம் அல்லது தங்கள் தொழிற் பரப்பில் வேலையின்றி இருக்கும் படித்த வாலிபருக்கு பகிர்ந்து கொடுத்து உற்பத்தியில் ஈடுபடுத்தலாம்.

7. குறிப்பிட்ட உணவுற்பத்திக்கு உரிய போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்க நடபடிக்கைகள் எடுக்கலாம்.

8. கம ஆயுதங்கள் பற்றுக்குறையாக யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. மண்வெட்டி, அலவாங்கு. பிக்கான் போன்ற ஆயுதங்களைச் சங்கங்கள் முன்னுடியே கொள்வனவு செய்து விநியோகம் செய்யலாம்.

9. பனம் பொருட்கள், குரக்கன், தினை போன்ற சிறுதானிய வகைகளை அரிசிக்குப் பதிலாகப் பாவிக்க ஊக்கப்படுதல்.

3. சங்கங்கள் நேரடியாக உணவு உற்பத்தியில் ஈடுபடக்கூடிய மார்க்கங்கள்

1. அரசாங்கத்திடம் இருந்து காணியைப்

பெற்று கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து உணவுற்பத்தி செய்ய நிர்வகிக்கலாம்.

2. தலைமைக் காரியாலயம், கிளை நிலையங்களில் உள்ள வெற்று இடங்களை உணவுச் செய்கைக்குக் கீழ் கொண்டு வரும்படியாக காரியாலயத்தில் அல்லது கிளைகளில் கடமை செய்யும் பணியாளர்களை ஊக்குவிக்கலாம். உற்பத்தியின் பயனை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கலாம். சங்கத்திற்குச் சொந்தமாக உள்ள நிலங்களில் வெற்றிடங்கள் இருந்தால் அவற்றை உணவு உற்பத்தியில் ஈடுபடுத்தாவிடில் விவசாயிகளுக்கு முன்மாதிரியாக இருக்கவும் மாட்டாது, சமூகத்திற்குச் செய்கின்ற ஒரு துரோகமும் ஆகும்.

3. விவசாய உத்தியோகத்தர்களின் ஆலோசனைகளைப் பெற்று ஒவ்வொரு சங்கமும் உணவுற்பத்தி திட்டம் ஒன்றை வகுத்து அத்திட்டத்தின் குறி இலக்குகளை அடைய முனைய வேண்டும்.

4. பாரபட்சம் பாராது மனிதாபிமான முறையில் உணவுப் பொருட்களைச் சமமாகப் பங்கீடு செய்தல் வேண்டும். நாம் ஒரு சமதருமத்தைக் கடைப்பிடிக்கும் நாட்டில் வாழுகிறோம் என்பதை நினைவுறுத்தல் வேண்டும்.

5. போட்டிகளை, உணவு உற்பத்தியை விருத்தி செய்வதற்காக திட்டங்கள் வகுத்து பரிசில்கள் வழங்கலாம். வீட்டுத் தோட்டங்களுக்கும், பாடசாலைத் தோட்டங்களுக்கும் விசேட பரிசில்கள் வழங்கலாம்.

6. அரசாங்கம் உணவு உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்காக கிராம மட்டம் தொடக்கம் மாவட்டக்கச்சேரி வரை பல நிறுவனங்களை உணவு உற்பத்தியை விஸ்தரிப்பதற்காக அமைத்திருக்கின்றது. திரு. சி. அருளம்பலம் (பா. உ.) அவர்கள் உணவு உற்பத்திக்கு அரசியல் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார். உணவு உற்பத்தி விடயங்களில் தம்மாலான

உதவிகள் அனைத்தையும் செய்து தருவதற்கு ஆயத்தமாய் இருக்கின்றார். எனவே அரசியல் அதிகாரியையோ, அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட உணவு உற்பத்தி நிறுவனங்களுடனோ நேரடியாகத் தொடர்பு கொண்டு உணவு உற்பத்தியாளரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கலாம்.

7. இதுபோன்ற வேறு நேரடி முயற்சிகளிலும் தாங்களாகவே சிந்தித்துச் செயலாற்றலாம்.

இறுதியாக ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு உணவு உற்பத்தி அபிவிருத்திக் குழுவை அமைத்து ஆக்கத்துக்குரிய முயற்சிகள் எடுக்க அக்குழுவிற்குப் பணிக்க வேண்டும். இயக்குனர்சபை குழுவின் ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து வேண்டிய வசதிகளையும், ஒழுங்குகளையும் நிருவாகிகளைக் கொண்டு செய்விக்கலாம். எனவே தாய் நாட்டுப் பற்றின் நிமித்தமும் எங்கள் மக்களைத் தற்பொழுது இறுக்கமான பிடியில் வைத்திருந்து வாட்டும் உணவுப் பற்றாக் குறை நிவிர்த்தியாகவும் அரைகுறை பட்டினியால் வாடிவதங்கும் குழந்தைகளினதும், ஏழை மக்களினதும் பேராலும் எல்லாச் சங்கங்களையும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையின் சார்பில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் உணவு உற்பத்தி விடயங்கள் குறித்து கடிதத் தொடர்புகளை நடாத்தவும், தங்கள் சார்பில் அரசாங்க திணைக்களங்களுடன் தொடர்பு கொள்ளவும் யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சு. சிவசுப்பிரமணியத்தை தேசியக் கூட்டுறவுச் சபை யாழ்கிளை அலுவலகத்தில் நியமித்திருக்கிறோம். எம்மால் ஆற்றக்கூடிய சேவைகள் இருப்பின் எமுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாக வேண்டுகிறோம்.

அமரர் இராசரத்தினம் நினைவுக் கட்டுரை

# உள்ளன்பு மிக்க நண்பன்

—கலையரசு க. சொர்ணலிங்கம்

எனது "உள்ளன்பு மிக்க நண்பன்" என்றால் திரு. இராசரத்தினத்தையே குறிப்பிடலாம். 1929 ஆம் ஆண்டு நான் உத்தியோக மாற்றமாக யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பிரபல உதைபந்தாட்ட வீரராக இவரைச் சந்தித்தேன். நானும் விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்டு விளங்கியபடியால் திரு. இராசரத்தினத்துடன் சுவாரஸ்சியமாகப் பேசினேன். அன்று முதல் அவர் என்மீது அபிமானங் கொண்டு என்னைத் தனது அண்ணன் போல மதித்துப் பழகிவந்தார். நானும் என்னுடைய தம்பிபோல அவருடன் அன்புடன் பழகிவந்தேன்.

இவருடைய திருமணம் உடுவில் சேர்ச்சில் நடந்தபோதும், அதன் பின்பு பல நாதஸ்வரவித்துவான்கள் இசைமாரி பொழிய நடைபெற்ற ஊர்வலத்தின் போதும் நான் நின்று ஒத்துழைத்தது நேற்று நடந்தது போல் பசுமையாக இருக்கின்றது.

எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பேசுவதும், அவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைத் தயங்காது செய்வதும் இவரது இயல்பான பண்பு. கூட்டுறவுத் துறையிலும் வேறு துறைகளிலும் பல உத்தியோகத்தர்களுக்கு இவர் உதவிபுரிந்து அவர்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கமும் உற்சாகமும் ஆலோசனைகளும் அளித்துவந்ததை நான் நேரடியாகக் கண்டுள்ளேன்.

எனது தொழிலுக்காக நான் சுற்றுப்பிரயாணம் செய்யும்போதெல்லாம் இவர் எந்தெந்த இடங்களில் உத்தியோகம் பார்க்கின்றாரோ அங்கு சென்று அவரைச் சந்திக்காது போவதில்லை. அவருடைய மனைவி மக்களும் என்னைத் தங்கள் குடும்பத்தில் ஒருவரைப்

போல் பேணி மிகவும் அன்பாகப் பழகிவந்தனர்.

எனக்கு அவர் புரிந்த உதவிகளை மறக்க முடியாது. நான் எதைக்கேட்டாலும் அதைத் தட்டாது நிறைவேற்றுவார். ஒரு சமயம் எனது 'மனோகரா' நாடகத்தில் சத்திய சீலர் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் நாடக தினத்திற்கு நாலைந்து நாட்களுக்கு முன்பு கடுமையான சுகயீனத்தால் படுத்து விட்டார். அப்பொழுது திரு. இராசரத்தினத்தைத் தற்செயலாகக் கண்டேன். அவரை அப்பாத்திரத்தை ஏற்று நடிக்கும்படி கேட்டேன். அப்பொழுது அவர் சிறிது சபைக் கோழைத்தனம் உள்ளவர். எனவே சற்று தயக்கத்துடன், ''அண்ணை நீ சொன்னால் நான் நடிக்கிறேன்'' என்று கூறினர். பின்பு சில நாட்களில் அவருக்கு நான் நடிப்புப் பயிற்சியளித்தேன். நாடகமும் சிறப்பாக நடைபெற்றது.

திரு. இராசரத்தினம் தனது தொழிலை மிகவும் நேர்மையாகவும், ஒழுங்காகவும் செய்து அத்தகைய உழைப்பினுல் மிகவும் உயர்ந்த பதவியை அடைந்தார். சுயநலமில்லாச் சேவையாலும், சாந்தமான பண்பினுலும் அவர் சகலரது அன்பையும் மதிப்பையும் பெற்றூர். இப்பெரியார் ஆற்றிய பெருந்தொண்டின் அழியாச் சின்னங்களில் குறிப்பிடத்தக்கனவாக யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய கூட்டுறவுச் சபையின் ஐந்து மாடிக் கட்டிடமும், அதனுடன் இணைந்த வீரசிங்கம் மண்டபமும் விளங்குகின்றன. கலையுலகம் வீரசிங்கம் மண்டபத்தை நினைக்கும் போதெல்லாம் இராசரத்தினத்தின் உள்ளத்தை வியந்து வாழ்த்திக் கொண்டேயிருக்கும்! கலை நிகழ்ச்சிகள் அங்கு நடைபெறும் போது இராசரத்தினமும் ரசிகர்கள் உள்ளத்தில் தோன்றுவார்!

இத்தகைய பெரியாரின் மறைவினுல் எனது உண்மையான நண்பனை இழந்துவிட்டேன். என்னைப் போல் பலர் தமது நண்பனை இழந்து துடிக்கிறூர்கள். கூட்டுறவாளர் தமக்கு தலைவனுய், நண்பனுய், சகோதரனுய், உயர்ந்த தொண்டனுய் திகழ்ந்த செம்மலை இழந்துவிட்டனர். அன்னூரின் பிரிவால் வருந்தும் நாம் அனைவரும் அவரின் இலட்சியங்களையும் பண்புகளையும் கடைப்பிடித்து வாழ்வதே அவருக்கு செய்யும் தக்க கைமாறுகும்.

(முற்றொடர்)

# விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்

R. H. கிறட்டன்

## இருவேறு வளர்ச்சிக் காரணிகள்

இருபதாம் நூற்றாண்டிலேதான் உலகளாவிய வகையில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியுற்றிருக்கின்றது. வளர்ச்சி வகையில் இருவேறு முறைகளை நாம் அவதானிக்கலாம். ஒரு புறம் புறத்தூண்டுதல் அற்று தன்விருப்பார்ந்த அடிப்படையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்தகைய வளர்ச்சிக்குப் புது உறுப்பினர்கள் அல்லது ஏற்கெனவே நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உதவியாய் இருந்திருக்கின்றன. இதுவே மிக ஆரோக்கியமானவளர்ச்சி முறை என்று கருதப்படுகின்றது. ஏனெனில், கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத்தாமே ஆதாரமாக இருக்க முடியும் என்பதையும் ஒரு தேவையை அவை பூர்த்தி செய்கின்றன என்பதையும் இது எண்பிக்கின்றது. மறுபுறமாக, எழுத்து வாசனை அறிவற்ற நாடுகளிலே கூட்டுறவுச் சங்கங்கள் புறத்தூண்டுதல் இன்றி தாமாக வளர்வதில்லை. கூட்டுறவு இயக்கத்தின் உள்ளார்ந்த சக்தியை உணர்ந்து அரசாங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கு செயற்கையாக உற்சாகமளிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றன. மாறுபட்ட இந்த இருவேறு நிலைகளையும் அவுஸ்ரேலியாவிலுள்ள குயின்ஸ்லண்டிலும், அதற்கு அண்மை நாடான நியூ கினியிலும் (பப்புவா) நாம் காணலாம். குயின்ஸ்லண்டில் விவசாயிகள் ஒத்துழைத்து வெற்றியீட்ட வேண்டுமெனத்

தாமாகவே தீர்மானித்தனர். இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின்பு இவர்கள் சிலரை அவுஸ்திரேலிய அரசாங்கம் தேர்ந்தெடுத்து பப்புவாவில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியுறுவதற்கு உதவுவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் நியமித்திருக்கின்றது.

செயற்கையாகப் புகுத்தப்பட்ட கூட்டுறவு இயக்கம் வெற்றியீட்டவில்லை. இதற்கான காரணங்களைப் பின்பு ஆராய்வோம். இங்கு நான் சுருக்கமான வரலாற்றையே வரைவதனால் கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஆட்களைப்பற்றி அதிகம் கூறாது வியாபார முயற்சிகள் என்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் பரிணாம வளர்ச்சி பற்றி கூடுதலான கவனம் செலுத்தியிருக்கின்றேன். எனினும், இவ்வாட்கள் கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்கு இன்றியமையாதவர்கள். இத்தகையவர்கள் இல்லாமை பல தோல்விகளுக்கு காரணமாய் இருந்திருக்கின்றது.

வளர்ச்சியுற்று வரும் நாடுகளிலே இரண்டு காரணங்களுக்காக செம்மையான வரலாற்றுப்பின்னணியை அறியமுடியாதிருக்கின்றது. முதலாவதாக தம்பத்தகுந்த பூரணமான ஆவணங்கள் இல்லை. இரண்டாவதாக கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை வேகமாக மாற்றமடையலாம். சாதாரணமாக இத்தகைய மாற்றங்கள் பாதகமாகத் தான் அமைகின்றன. ஆனால், சில வேளையில் காணவில் நடந்தது போல நிலைமை திடீரென மறுதலையாக மாறலாம்.

(வளரும்)

# எம். எஸ். சி. பட்டம் பெற்றார்

முன்னாள் யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் திரு. க. பரமோதயன் இங்கிலாந்திலுள்ள பாத் பல்கலைக்கழகத்தின் M. Sc. பட்டத்தினைப் பெற்றுள்ளார். இவர் இப்பட்டத்திற்கு அபிவிருத்தி ஆய்வியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். விரைவில் அவர் இங்கிலாந்தின் நிருவாக சேவையில் உயர்பதவி யொன்றைப் பெற இருக்கின்றார்.

# திட்டமிடலில்
# பணியாளர் ஈடுபட வேண்டும்

பல்வேறு உத்தியோகத்தர்கள் பல்வேறுபட்ட அறிவுறுத்தல்களை சங்கப் பணியாளர்களுக்குக் கொடுத்து வந்திருப்பதனுல் குழப்பமான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய விரும்பத்தகாத சூழ்நிலையை அகற்றி சீரான நிலையை ஏற்படுத்தும் பொருட்டே இத்தகைய கருத்தரங்குகளை கூட்டுறவுத் திணைக்களம் நடாத்தி வருகின்றதென பதில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. T. V. விதாரண (எண்பார்வை) பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார், மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. S. இராமநாதன் தலைமைதாங்கிஞர். சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. J.S.M. de சில்வா சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (எண்பார்வை) கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. வி. மகேந்திரன், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு: திரு. சி. நாகலிங்கம் ஆகியோரும் இக்கருத்தரங்கில் சமுகமளித்தனர். திரு. விதாரண மேலும் கூறியதாவது: குறிப்பிட்ட கால எல்லைக்குள் எண்பார்வைகள் முடிவடைய வேண்டுமென திணைக்களம் தீர்மானித்துள்ளது: எனவே, இத்தகைய கருத்தரங்குகள் மூலம், சங்கங்களின் நிதிக்கட்டுப்பாடு சீராகும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. S. இராமநாதன் கூறியதாவது: எமது பிரிவு அளவிலே சிறிய பிரிவாக இருந்தபோதிலும் இங்குள்ள விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்ருேம். அதுமட்டுமன்று, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டகைத் தொழில்களையும் நாம்

தொடங்கவிருக்கின்றோம். எடுத்துக்காட்டாக உரவுற்பத்தித் தொழிற்சாலை, வைக்கோல் அட்டை உற்பத்தித் தொழிற்சாலை ஆகியவற்றை நாம் வெகு விரைவிலே தொடங்கவிருக்கின்றோம்.

எண்பார்வைபற்றி விளக்கிய காரியாலயப் பரிசோதகர் திரு. ஹெக்டர் சில்வா கூறியதாவது: பொது முகாமையாளர் எண்பார்வைப் பகுதி பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. அவர் கணக்காளரின் பொறுப்பென நினைக்கின்றார். ஆனால், உண்மையிலே பொதுமுகாமையாளரே எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருப்பதனால் அவருக்கு எல்லாத் துறைகள் பற்றியும் குறிப்பாக கணக்கியல் துறை பற்றி அதிக அக்கறை இருத்தல் வேண்டும். பிரதம நிருவாகி என்ற முறையில் பொது முகாமையாளருக்கு சங்கத்தைப் பற்றி பூரண அறிவுஇருத்தல் வேண்டும். ஒவ்வொரு கிளைக்கும் சில்லறை வியாபார நிலையமாய் இருந்தாலென்ன மொத்த வியாபார நிலையமாய் இருந்தாலென்ன இருப்புகள் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதனை வரையறுக்கும் போது அவ்வப்பகுதியில் வாழும் மக்களின் தேவைகளை மனதிற்கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் ஆதாயத்தைப் பற்றி எண்ணாது இயங்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறானது. கூட்டுறவுச் சங்கங்கள் வியாபார நிறுவனங்களாக இருக்கும் போது அவை ஆதாயத்தை மனதிற் கொண்டு இயங்காவிடின் ஒருபோதும் மக்கள் வங்கியின் பிடியிலிருந்து அவை விடுபடமாட்டா.

எல்லாப்பணியாளர்களும் திட்டமிடலில் ஈடுபட்டால் தான் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாக இயங்க முடியுமென கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (முகாமை) திரு. லியனகே வலியுறுத்தினார். அவர் மேலும் கூறியதாவது: பொது முகாமையாளருக்கும் நெறியாளருக்குமிடையேயுள்ள தொடர்பு, தீர்மானம் எடுத்தலைத் தழுவியது. ஒவ்வொரு மட்டத்திலும் தீர்மானம் எடுத்தல் கூறுகள் இருக்கின்றன. பெரிய ஆரம்பப் ப. நோ. கூ. சங்கங்களை எடுத்துக்கொண்டால் இத்தீர்மானம் எடுத்தலை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கருத்

துருவான தீர்மானங்களை பொதுச்சபையும் நெறியாளர் குழுவும் எடுக்கும். இவற்றிற்கமைய நாளாந்தம் பொது முகாமையாளரும், அவர்களது பணியாளரும் நடைமுறைத் தீர்மானங்களை எடுத்த படியே இருப்பார். எனவே, தீர்மானம் எடுத்தல் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இவ்வரையறைக்கமைய நடைமுறைப் பிரமாணங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். மேலும் முகாமையைப் பற்றிச் சிந்திக்கும் போது நாம் உயிரற்ற பிண்டங்களினுடன் அல்ல மனிதர்களுடன் பழகுகின்றோம் என்பதனை மறத்தலாகாது: இதுவரைகாலமும் நாம் பழைய அமைப்புக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்திருப்பதனால் அதிகாரிகளின் ஆட்சி வலுப்பெற்று வந்திருக்கின்றது. சில குறிக்கோள்களை அடைவதற்கே நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால், சில வேளைகளிலே இந்நிறுவனங்களிலே கடமையாற்றும் பணியாளரின் குறிக்கோள்கள் நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக இருக்கக் கூடும். கோஷ்டி சேர்வது மனித இயல்பு.

ஆதலால், நிறுவனத்தின் குறிக்கோள்களைப் பொருட்படுத்தாது சிறு சிறு குழுக்கள் தமது நலன்களிலேயே கூடுதலான அக்கறை கொண்டிருக்கலாம். எடுத்துக் காட்டாக தொழிற் சங்கங்களைக் குறிப்பிடலாம். உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு வேலை நிபந்தனைகளை எவ்வளவுதான் திருத்திக் கொடுத்தாலும் தொழிற் சங்கங்கள் இவற்றினை ஏற்காது விடுத்தால் உற்பத்தி பெருகப் போவதில்லை. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரை அவற்றிற்கு ஏற்கனவே வரையறுக்கப்பட்ட திட்ட வட்டமான குறிக்கோள்கள் உள. இக்குறிக்கோள்களை எய்தும் பொருட்டு பணியாளர்களை நாம் நெறிப்படுத்தல் வேண்டும். இப்பொழுது நாம் பணியாளருக்குக் கடமைப் பட்டியலை வழங்குகின்றோம். இப்பட்டியல்களிலே சுட்டப்படாத வேலைகளைச் செய்வதற்குப் பணியாளர்கள் மறுக்கின்றனர். இவ்வாறான பட்டியல்களைக் கொடுப்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட பதவிக்குரிய விசாலமான குறிக்கோள்களைச் சுட்டுவதே சாலவும் சிறந்தது. சங்கத்தின் விசாலமான குறிக்கோள்களைத்

துறை துறையாகப் பிரிப்பது நன்மை பயக்கும். இவ்வாறு துறைகளாகப் பிரிப்பதன் மூலம் பொறுப்பை திட்டவட்டமாக வரையறுப்பதும் சுலபமாகும். எனவே பொது முகாமையாளர் இயன்றளவு ஆகக் குறைந்த மட்டத்தில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு அதிகாரத்தைக் கையளித்தல் வேண்டும். ஆனால் இன்றோ நிலைமை இதற்கு நேர்மாறாக உள்ளது. இதனால் திருப்திகரமான சேவையை நாம் எதிர்பார்க்க முடியாது.

முகாமைக் கொள்கையைப் பற்றி மேலும் விளக்குகையில் திரு. லியனேகே கூறியதாவது: ஒன்றுபட்ட ஆணைபிறப்பித்தல் வேண்டும். ஒரு பணியாளருக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆணைகளைப் பிறப்பித்து வந்தால் அங்கு கட்டுப்பாடு நிலவ முடியாது. வெவ்வேறு பதவிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளை நடைமுறைப் பிரமாணங்கள் திட்டவட்டமாக வரையறுக்க வேண்டும். ஒருவர் எல்லாரையும் கட்டுப்படுத்துவதென்பது நடைமுறையில் இயலாத காரியம். எனவே கட்டுப்பாட்டு எல்லையையும் நாம் மதித்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக பொது முகாமையாளர் 7 பேருக்குக் கூடுதலாக மேற்பார்வை செய்ய முடியாது. ஆதலால், இந்நிலையில் பதில் பொது முகாமையாளர் பதவிகளை உருவாக்க வேண்டியிருக்கலாம். இதிலும் ஓர் ஆபத்து இருக்கின்றது அமைப்பு பட்டங்களைக் கூட்டிக் கொண்டு போனால் கீழ் மட்டத்திலிருந்து பொது முகாமையாளர் அதிகம் தள்ளப் பட்டு விடுவார். இது ஆரோக்கியமானதல்ல. ஓரளவு நெருங்கிய தொடர்பு மேல் மட்டத்திற்கும் கீழ் மட்டத்திற்கும் இடையே இருந்தால் சங்கத்தின் நோக்கங்களை அடையலாம்.

வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டைப் பற்றி விளக்குகையில் திரு. லியனகே கூறியதாவது: கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை வரவு செலவுத் திட்டம் பல்வேறு துறைகளுக்கிடையில் ஏற்படும் ஒருவகையான இணக்கம். எவ்வாறு அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் போர் நிறுத்த உடன் படிக்கையைப் போன்றதோ கூட்டுறவு இயக்கத்திலும் மூன்று சாராருக் கிடையே

ஏற்படும் முரண்பாடுகளின் விளைவே வரவு செலவுத் திட்டம். சிலர் கூட்டுறவு இயக்கம் ஆதாயத்தைப் பற்றிக் கவலைப்படாது சேவைசெய்ய வேண்டு மென்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கின்றனர். ஒருசிலர் கூட்டுறவு இயக்கம் கூடுதலாக மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்று எதிர் பார்க்கின்றனர். இன்னொரு சாரார் முதலீட்டுக்கு ஏற்ற வருவாய் பெறப்பட வேண்டுமென்று கருதுகின்றனர். இத்தகைய மூவருக்குமிடையே ஏற்படும் இணக்கம் தான் கூட்டுறவுச் சங்கத்தின் வரவு செலவுத் திட்டம். எந்த இயக்கத்திற்கும் திட்ட வட்டமான குறிக்கோள் இருக்கவேண்டும். குறிக்கோள்களின் பாற்பட்டதாகவே முகாமை அமையவேண்டும் என்பது இன்றைய கொள்கை. ஆகவே வரவு செலவுத் திட்டத்திற்கும், இக்குறிக்கோள்களுக்குமிடையே இயைபை ஏற்படுத்த வேண்டும். வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு மூலம் பொதுச் சபை நெறியாளர் குழுவைத் தான் வரைந்த கோட்டிற்கேற்ப நடக்க நிர்ப்பந்திக்கலாம்.

பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. S. இராமநாதன் நன்றி கூறிய பின்பு கூட்டுறவு உத்தியோகத்தர்களின் சார்பாக காரியாலயப் பரிசோதகர் திரு. மாட்டின் அவர்களும் தேசிய கூட்டுறவுச் சபையின் சார்பாக பரந்தன் கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் அவர்களும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் சார்பாக பூநகரி ப. நோ. கூ. ச. பொது முகாமையாளர் திரு. விஸ்வலிங்கம் அவர்களும் நன்றி தெரிவித்தனர்.

—★—

# AGRICULTURAL CO-OPERATIVES

R. H. GRETTON

*(Continued from last issue)*

## U. K., GERMANY AND SWEDEN

Lack of space precludes a complete catalogue of each of the developed countries and their particular contribution to the history of co-operation in agriculture. Before leaving the subject however, it is necessary to add that in some instances consumer co-operation has been the stronger side of the movements e. g. in the U. K., Germany, and Sweden. The reasons, probably lie in the social structure of these countries, reflecting the fact that all became industrialized in the 19th century and suffered a shift of population from rural to urban conditions. People living in towns, on a low level of subsistence, were able to help themselves by co-operation, whereas those in the country, perhaps not any better off financially, were too scattered and too weary at the end of the day to think of attending a co-operative meeting place. This purely physical context in rural and urban people explains many of the differences in the history of co-operation, within a given country and between the so-called developed countries and other parts of the world

## INTEGRATION

In the search for ways to communicate the lessons of modern agriculture to millions of small farmers it is soon obvious that they must first be organized into groups, be they called co-operatives or something else, which in turn can become part of a larger network and thus provide a two-way channel between farmers and the agencies that seek to help them Co-operatives have here an important role, and it is foremost among the reasons why a great intergovernmental agency like the Food and Agriculture Oganisation of the United Nations (FAO) has from its inception in 1945 adopted a policy of supporting the development of co-operatives throughout its member countries. There are other international agen-

cies, such as the International Labour Organization, also engaged in co-operative work. But in FAO, where the world food situation is under constant review, the critical urgency of agrarian reform is keenly felt. The whole purpose of FAO's Indicative World Plan for Agriculture is to bring light on ways and means for producing enough food to meet the future needs of humanity. A great, combined effort is called for, because agriculture is a complex business. And this is another consideration in favour of co-operatives; that they have been successful in supplying many of the varied services needed by a farmer, notably in purchasing supplies, arranging credit facilities, and in processing and marketing farm produce. A completely integrated approach to agricultural problems is well demonstrated in those countries where co-operatives are prominent, and this is not mere coincidence.

## MINIMUM FARM SERVICES

Take the case of a typical farm in Africa or Asia, where the ground is tilled by hand and in a good year the harvest is no more than enough to feed the farmer and his family with a small amount left over for seed. In a bad year he will go hungry and be obliged to beg a loan to span the long wait until next year's harvest. Once in debt to the moneylender, he seldom is able to get out of his grasp; he has become part of a reactionary system that will resist all his efforts to get free. To break out of his indebtedness, the poor farmer needs several things simultaneously; (a) a cash loan to pay off the money-lender; (b) further credit to purchase fresh seed, fertilizer; new implements; (c) expert advice on how to use these new things in producing a larger and better harvest than before; (d) help in processing and marketing his surplus produce, on the assumption that (e) and (f) do result in increasing his harvest beyond his own family needs.

It sounds simple. Give a farmer these four services and you lift him out of poverty, from the subsistence level to comparative affluence. Of course it is easier said than done. To begin with, the money lender is not going to lose a customer without a struggle. Secondly, in using new seeds and methods a farmer needs experience before deriving their optimum benefits. And he will need good fortune, for farming is a notoriously hazardous occupation. Many a promissing crop has been ruined by bad weather, or by infestation from insects or disease. Hence it is very important that advice be available, of the right kind and at the right time.

## EXPERT ADVICE

A farmer, quite apart from the possible hindrance of debts, is normally reluctant to attempt methods different from the ones followed for generations before him. He can be persuaded to take' risks only by specially trained people, who in many countries are called an agriculture extension service. The help of a good extentionist is vital at every stage, especially in the beginning. His advice should include an indication of how the farmer can overcome his weakness by co-operating with other farmers. In the long run co-operation has greater importance, because the extensionist will have to think of further improvements in the farming process as soon as he can hand over his first responsibilities. This is why he will be bound to encourage the formation of co-operatives or some equivalent form of farmers' association. The greatest virtue that can be claimed by co-operatives is the ability to operate without dependence on others, though admittedly there is still a long way to go before it can be said that co-operatives everywhere have attained their ultimate goals.

## FIRST STEPS - CREDIT

As it will seldom happen that a fully integrated reform of agriculture can be undertaken on a nationwide basis, it follows that the next best thing is a step by step change. What then should be the first step? Nearly always it will be credit that a farmer wants before anything else. But credit alone will not alter his ways, any more than a general moratorium of debts is any final solution. Credit implies an undertaking to repay, and offering some security as a pledge to refund the actual money received. But a poor farmer has no security, other than the crop which he hopes to harvest in generous quantities. Thus it comes about that a credit agency when giving a loan to a farmer may legitimately take as security a lien on his future crop, and further, that satisfactory marketing arrangements assume almost equal importance with credit.

*(To be continued)*

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

**அரங்க அமைப்பு ஆசன அமைப்பு**
**மின்னொளி அமைப்பு**

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

**நாடகம், நடனம்**

| | | |
|---|---|---|
| இரவு | 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் | ,, ,, | 200-00 |

**இசை நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| இரவு | ,, ,, | 175-00 |
| பகல் | ,, ,, | 150-00 |

**ஏனைய நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |

**திருமணம் – பகல் அல்லது இரவு**

| | |
|---|---|
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |

| | | |
|---|---|---|
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.


தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு
12, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்;

தொலைபேசி:
7238

கூட்டுறவுத்தொடர்பு ஒரு நல்ல தொடர்பு
வடபகுதி விவசாய
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
அகில இலங்கை
கூட்டுறவு நுகர்ச்சியாளர்
சமாசத்துடன்
இணைந்து தற்பொழுது
ஸ்ரீலங்கா கூட்டுறவு
சந்தைப்படுத்தும் சம்மேளனமாக
இயங்கி வருகின்றது.
இவ்விணைப்பு
உற்பத்தியாளரையும், நுகர்ச்சியாளரையும்
மேலும் நெருங்கிய தொடர்புகொள்ள
உதவியளிக்கின்றது.
உங்கள் வருங்காலத்திட்டத்தைக் கூட்டுறவுக்கூடாக அமையுங்கள்.
திறமான சேவை, பாதுகாப்பு, வெற்றிக்கு
ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும்
சம்மேளனத்தை ஆதரியுங்கள்,

**ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம்**

127, கிரான்பாஸ் வீதி,
**கொழும்பு 14.**
தொலைபேசி 25642-24991
தந்தி கொன்கம்''

111, பிரதான வீதி,
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி 504
தந்தி ''அப்பீஸ்''

Published by the Jaffna District Committee, National Co-operative Council of SriLanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the J. Municipality M.P.C.S. Printing Branch, the Co op. Printers Ltd., Jaffna. (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.)